யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 08
First Term Examination – 2020 – Grade 08

விஞ்ஞானம்	34	T	I, II	இரண்டு மணித்தியாலங்கள் Two Hours

சுட்டெண் **Index No**

விஞ்ஞானம்

பகுதி - I

01. மிகப் பெருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1. பற்றீரியா மூலம் பரவாத நோய் எது?

   1. தொழுநோய் 2. காசம் 3. நெருப்புக்காய்ச்சல் 4. மலேரியா

2.
   இவ்அங்கியின் இடப்பெயர்ச்சிக்கு உதவுவது

   1. சவுக்குமுளை 2. தசைப்பாதம்

   3. பிசிர் மயிர் 4. போலிப்பாதம்

3.
   படத்தில் காட்டப்பட்டுள்ள அங்கி பற்றிய கூற்றுக்களில் சரியானது

   1. தோல் செதில்களாலானது 2. மென்னுடலியாகும்

   3. துண்டப்புழுவாகும் 4. மூட்டுக்காலிகள் ஆகும்

4. மஞ்சள் நிறத்தில் காணப்படும் மூலகம்

   1. கந்தகம் 2. சோடியம் 3. செப்பு 4. இரும்பு

5. நுண்ணங்கிகளினால் நொதித்தல் செயற்பாடு நிகழும் உணவுப்பதார்த்தம் எது?

   1. வடை 2. பருப்பு 3. லட்டு 4. முறுக்கு

6. தோலில் செதில்கள் அற்ற விலங்கு பின்வருவனவற்றில் எது?

   1. ஆமை 2. சலமண்டர் 3. முதலை 4. பாம்பு

kalvi.lk

7. கசோவரியின் சுவாச அங்கம் எது?

1. நுரையீரல் 2. தோல் 3. வாய்க்குழி 4. ஏட்டு நுரையீரல்

8. படத்தில் காட்டப்பட்டுள்ள அங்கியின் இயல்பாக கருதக்கூடியது?

1. தோலில் நெய் சுரப்பி காணப்படும்
2. தோல் சுரப்பிகள் அற்றது.
3. உடல் செதில்களால் மூடப்பட்டிருக்கும்
4. இடப்பெயர்ச்சிக்கு ஒரு சோடி அவயவங்கள் காணப்படும்.

9. இலைகள் ஒன்றுவிட்ட ஒழுங்கில் தண்டில் காணப்படும் தாவரம் எது?

1. கொய்யா 2. அன்னமுன்னா 3. வட்டக்கண்ணி 4. அரசு

10. ஏறும் தண்டுகளைக் கொண்ட தாவரம் எது,?

1. வெற்றிலை 2. மிளகு 3. பாகல் 4. ஓர்க்கிட்

11. இடம் மாறிப்பிறந்த வேரில் உணவு சேமிக்கும் தாவரம் எது?

1. கரட் 2. டேலியா 3. முள்ளங்கி 4. பீற்றூட்

12. படத்தில் உள்ள தாவரம் இனம் பெருகும் முறை

1. உறிஞ்சிகள் மூலம்
2. ஓடிகள் மூலம்
3. தண்டுகள் மூலம்
4. நிலக்கீழ் தண்டுகள் மூலம்

13. பின்வருவனவற்றுள் ஒட்சிசன் வாயுவின் துணிக்கைகளின் ஒழுங்கமைப்பாக அமையக்கூடியது எது?

1. 
2. 
3. 
4. 

kalvi.lk

14. சோடியம் ஐதரொடசைட்டு சேர்வையில் அடங்கியுள்ள மூலகங்கள் எவை?

1. சோடியம், குளோரின்
2. சோடியம், ஒட்சிசன், ஐதரசன்
3. சோடியம், கந்தகம், ஒட்சிசன்
4. ஐதரசன், ஒட்சிசன்

15. பின்வருவனவற்றுள் அடர்த்தி கூடிய பதார்த்தம்

1. தங்கம்
2. ஈயம்
3. இரசம்
4. இரும்பு

16. பின்வருவனவற்றுள் அல்லுலோகமாக அமைவது எது?

1. ஈயம்
2. கல்சியம்
3. கந்தகம்
4. இரும்பு

17. பின்வருவனவற்றில் கோல் அதிர்வதனால் ஒலி எழுப்பப்படும் உபகரணம்?

1. சைலபோன்
23. தபேலா
3. புல்லாங்குழல்
4. மிருதங்கம்

18. இசைக்கவர் ஒன்று செக்கனுக்கு 50 அதிர்வுகளை ஏற்படுத்துகின்றது எனின் அதன் அதிர்வு மீடிறன் யாது?

1. 25 HZ
2. 1HZ
3,. 10 HZ
4. 50HZ

19.



A,B இசைக்கவர்களை அதிரவிடும் போது

1. இசைக்கவர் A கூடிய மீடிறனைக் கொண்டிருக்கும்
2. இசைக்கவர் B கூடிய மீடிறனைக் கொண்டிருக்கும்
3. இசைக்கவர் B குறைந்த மீடிறனைக் கொண்டிருக்கும்
4. இரண்டு இசைக்கவர்களும் சமமான மீடிறனைக் கொண்டிருக்கும்.

20. மனிதக் காதின் கேள்தகவு எல்லை யாது?

1. 20HZ – 2000HZ
2. 20HZ – 200 000HZ
3. 20HZ – 20 000HZ
4. 20HZ – 200HZ

(20x2=40 புள்ளிகள்)

kalvi.lk

பகுதி - II

01. பின்வரும் நுண்ணங்கிகளை அவதானித்து விடை தருக

(A).

A


B

C

D

1. A, B, C, D, யிலுள்ள நுண்ணங்கிகளை இனங்காண்க

A - …………………………………… C - ……………………………………

B - …………………………………… D - ……………………………………

2. ஒளித்தொகுப்பு செய்யும் நுண்ணங்கி எது?

………………………………………………………………………………………………………

3. Aயினால் ஏற்படக்கூடிய நோய் ஒன்று தருக?

………………………………………………………………………………………………………

4. இலத்திரன் நுணுக்குக்காட்டிக்குரிய நுண்ணங்கி எது?

………………………………………………………………………………………………………

5. போலியோவை ஏற்படுத்தும் நுண்ணங்கி எது?

………………………………………………………………………………………………………

Education கல்வி அධ්‍යාපන

(B) நுண்ணங்கிகளினால் நன்மைகளும் தீமைகளும் ஏற்படுகின்றன.

1. கைத்தொழில் துறையில் நுண்ணங்கிகளின் முக்கியத்துவம் 2 தருக?
2. நுண்ணங்கிகளின் செயற்பாட்டிற்கு ஏதுவான காரணிகள் எவை?
3. நுண்ணங்கிகளினால் உற்பத்தி செய்யப்படும் நொதியங்களின் காரணமாக உணவில் ஏற்படும் மாற்றங்கள் 2 தருக?

(4+1+1+1+1+2+3+2=15 புள்ளிகள்)

02. பொது இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு விலங்குகளை கூட்டங்களாக வகைப்படுத்தலாம்.

1. பின்வரும் அங்கிகளின் கூட்டங்களை எழுதுக?

a. தும்பி - ……………………………………
b. இருவால்வுளி - ……………………………………
c. ஐதரா - ……………………………………
d. லீச் அட்டை - ……………………………………
e. வௌவால் - ……………………………………

kalvi.lk

2. அம்பிபியாக் கூட்டத்தின் பொது இயல்புகள் 2 தருக?

3. முன் அவயவங்கள் இறக்கைகளாக திரிபடைந்துள்ள அங்கிகள் 2 தருக?

4. நிடாரியாக்கூட்டத்தின் இரு பிரிவுகளையும் தருக?

5. பின்வரும் அங்கிகளின் சுவாச உறுப்பை தருக,

   a. பென்குயின் - ……………………………………

   b. மீன் - ……………………………………

   c. தேவாங்கு - ……………………………………

   d. கபரகொய்யா - ……………………………………

(5+2+2+2+4=15 புள்ளிகள்)

03. சூழல் சடப்பொருள், சக்தி ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

1. சடப்பொருட்களின் இயல்பு தொடர்பாக ஏற்றுக் கொள்ளக்கூடிய கொள்கையை முதலில் முன்வைத்தவர் யாார்?

2. பின்வரும் உபகரணங்களை இனங்கண்டு அவற்றின் பயன்பாட்டினை எழுதுக?

A


B


C

3. 

   1) இப்பரிசோதனையின் நோக்கம் யாது?

   2) தூய நீரின் உருகுநிலை யாது?

   3) இங்கு கலக்கியின் பயன்பாடு யாது?

4. தூய பதார்த்தங்களுக்கு உதாரணம் 2 தருக?

5. சடப்பொருட்களின் பௌதீக இயல்புகள் இரண்டு தருக?

6. அடர்த்தியை அளக்கப்பயன்படும் அலகு யாது?

(1+6+3+2+2+1 = 15 புள்ளிகள்)

kalvi.lk

04. தாவரங்கள் பரந்த பல்வகைமையைக் கொண்டுள்ளன

(A)



1. பகுதிகள் A, B, C, D, E யை இனங்காண்க
2. Bயின் பிரதான தொழில் யாது?
3. ஆவியுயிர்ப்பைக் குறைப்பதற்கு தாவரங்கள் கொண்டுள்ள இசைவாக்கங்கள் இரண்டு தருக?
4. மூச்சுவேர் காணப்படும் தாவரங்கள் 2 தருக? அதன் தொழில் யாது?
5. வேர் மூலம் புதிய தாவரங்களை உருவாக்கும் தாவரங்கள் 2 தருக?

(B)

1. இவ் இசைக்கருவியினை இனங்காண்க
2. இவ் இசைக்கருவியில் எது அதிர்வதன் மூலம் ஒலி பிறப்பிக்கப்படுகின்றது?
3. இழை அதிர்வதனால் ஒலியைப் பிறப்பிக்கும் உபகரணம் ஒன்று தருக?
4. இசைச்சிகிச்சை மூலம் குணப்படுத்தக்கூடிய நோய்கள் இரண்டு தருக?

(2½+1+2+2½+2+1+1+1+2=15 புள்ளிகள்)

kalvi.lk

GRADE 6-11

STUDY WITH US..!

ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
Pathmanathan Pathmaraj
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)

TAMIL MEDIUM
ENGLISH MEDIUM

MONTHLY
600/=

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

075 287 1457

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

எங்கள் குறிக்கோள்

எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.

kalvi.lk

கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.

Viber Community

Whatsapp Channel

Facebook Page